## தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

### இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
### மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

### D011 பண்டைய இலக்கியம்
### ஜனவரி–பிப்ரவரி 2024

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. ஐங்குறுநூற்றின் நெய்தல்திணை பாடல்களைப் பாடியவர் யார்?
2. ஏறுதழுவுதல் இடம் பெற்றுள்ள கலி எது?
3. இறைவன் தருமிக்குப் பொற்கிழி வழங்கிய ஊர் எது?
4. அதியமானின் நண்பர் யார்?
5. மடல் பாடுவதில் வல்லவர் யார்?
6. பாலைக்குரிய நிலம் எது?
7. ஆடிப்பாவை எனப் பரத்தை யாரைக் குறிப்பிடுகிறாள்?
8. சிறுபாணாற்றுப்படையின் பாடல் வரிகள் எத்தனை?
9. கூத்தராற்றுப்படையின் ஆசிரியர் யார்?
10. பண்டையத் திருமண முறை குறித்துப் பாடிய நூல் எது?
11. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?
12. முல்லை நிலத் தெய்வம் எது?
13. திருமுருகாற்றுப் படையின் ஆசிரியர் யார்?
14. நெஞ்சாற்றுப்படை என அழைக்கப்படும் நூல் எது?
15. பரிபாடலில் கிடைத்துள்ள பாடல்கள் எத்தனை?

**பிரிவு – 2**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. நற்றிணை– நூல் குறிப்புத் தருக.
2. வரைவு கடாஅதல் என்றால் என்ன?
3. புறநானூற்றிற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?
4. அகநானூற்றின் உட்பிரிவுகள் எத்தனை? அவை யாவை?
5. பாட்டும் தொகையும் என அழைக்கப்படுவன எவை?
6. முல்லைப்பாட்டு– நூற்குறிப்புத் தருக.
7. பொருநராற்றுப்படை– பெயர் விளக்கம் தருக.
8. பதிற்றுப்பத்து பாடிய புலவர்களுள் மூவரைப் பற்றக் குறிப்பிடுக.

**பிரிவு – 3**

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) ஐங்குறுநூற்றின் சிறப்பு குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) புறநானூற்றுப் பாடல் வழி அறியலாகும் பண்டைத் தமிழர் வாழ்வியலைத் தொகுத்தெழுதுக.

2. (அ) ஆற்றுப்படை நூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கடையெழு வள்ளல்களின் கொடைச்சிறப்பை விவரி?

3. (அ) தசும்பு துளங்கிருக்கை என்ற தலைப்பில் அமைந்த பதிற்றுப்பத்துப் பாடலின் பொருளை விவரி.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகை நூல்கள் குறித்துக் கட்டுரை வரைக.

****